Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 081 | சனிக்கிழமை Saturday | 20.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மேகதாது அணைக்கு எதிராக முதலமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேறியது



சென்னை: மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா அரசை கண்டித்து தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையின் இரண்டாம் நாள் கூட்டத்தொடர் காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முதலில் மறைந்த மூத்ததலைவர்கள், திரைப் பிரபலங்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் விஜய் மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து அரசின் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தொடர்ந்து பேசிய முதல்வர் விஜய், "காவிரி நடுவர் மன்றம் 5-2-2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்ச நீதிமன்றம் 16-2-2018அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கேமேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் எதிர்ப்பை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது. கர்நாடக அரசின் மேகேதாட்டு அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

காவிரி நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றம், காவிரிப்படுகை ஒரு பற்றாக்குறை படுகை எனக் குறிப்பிட்டுள்ளது, படுகையின் மொத்த நீரினையும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துவிட்டால், காவிரிப் படுகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது. காவிரிப் பிரச்சினை தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினையாகும்.

ஆதலால், கர்நாடக அரசுமேகேதாட்டுவிலோ அல்லது காவிரிப் படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தையோ, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் விரிவானதிட்டஅறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது" என்று முதல்வர் பேசினார்.

தொடர்ந்து முதல்வரின் தீர்மானத்தின் மீது அரசியல் கட்சித் தலைவர்கள் உரையாற்றினர்.

தீர்மானத்தின் மீது முதல்நபராக உரையாற்றிய காங்கிரஸ் அமைச்சர் ராஜேஷ்குமார், தீர்மானத்தை ஆதரித்தார்.

முதலாவதாக ஆதரித்த காங்கிரஸ்...

அமைச்சர் ராஜேஷ்குமார் பேசுகையில், "முதல்வர் ஜோசப் விஜய் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை காங்கிரஸ் ஆதரிக்கிறது. காவிரி என்பது ஒரு நதி மட்டுமல்ல, தமிழக விவசாயிகளின் உயிர்நாடி. அதனை நம்பி லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கை உள்ளது.காவிரி நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் தீர்ப்பை மதிக்காமல், தமிழக அரசின் ஒப்புதல் பெறாமல் காவிரி நடுவே அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசுக்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இது சட்டத்துக்கு எதிரானது மட்டுமல்ல, தமிழக மக்களின் உரிமையை பறிக்கும் செயலாகும்.

காவிரி நீர் வழங்குவது குறித்து நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் தீர்ப்பின்படி, ஆண்டுதோறும் 177.25 டிஎம்சி தண்ணீரை மூன்று வழித்தடங்களில் கர்நாடக அரசு வழங்க வேண்டும்.

தமிழகத்துக்கு வரும் நீரைத் தடுத்து மேகேதாட்டு அணை கட்டுவது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானதாகும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி டெல்டா விவசாயிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். தமிழகத்தின் பல பகுதிகளும் பாதிக்கும். கர்நாடக அரசின் ஒருதலைபட்மான நடவடிக்கையை காங்கிரஸ் கண்டிக்கிறது," என்று பேசினார்.

"தமிழகத்துக்கு மிக முக்கியமான இந்த தீர்மானத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. அனைவரும் ஒன்றாகத்தான் இருப்போம். அந்தவகையில், தேமுதிகவும் இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறது.

தமிழகத்தில் எங்கெல்லாம் நதிகளை இணைக்க முடியுமோ, அதைச் செய்ய வேண்டும். அனைத்துப் பகுதிகளையும் தூர்வார வேண்டும். மழை நீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்க வேண்டும்." எனத் தெரிவித்தார்.

# "மேகதாது அணையை தடுக்கும் தமிழக அரசின் முயற்சிகளுக்கு தி.மு.க. துணை நிற்கும்" எதிர்கட்சி தலைவர் உதயநிதி உறுதி



சென்னை: "மேகதாட்டுவில் அணை கட்டப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு. காவிரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளார்.மேகேதாட்டு அணைக்கு எதிராக முதல்வர் கொண்டுவந்த தீர்மானத்துக்கு திமுக ஆதரவு அளிக்கிறது," என தமிழக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரின் 2-வது நாளான இன்று மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து முதல்வர் விஜய் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார். இது குறித்து உதயநிதி ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறும்போது, "மேகேதாட்டுவில் அணை கட்டப்படக்கூடாது என்பதுதான் திமுகவின் உறுதியான நிலைப்பாடு. காவிரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளார். இதை இந்த அவையில் இருக்கக்கூடிய மூத்த உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஒரு நீண்ட நெடிய சட்ட, அரசியல் போராட்டங்களை நடத்திதான் நாம் காவிரி மீதான உரிமையை பெற்றெடுத்தோம். ஆனால் அதைப் பறிக்கும் வகையில் கர்நாடக அரசு, மேகேதாட்டுவில் அணை கட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

எங்களுடைய கூட்டணியில் இருந்த கட்சி, கர்நாடகவில் ஆட்சியில் இருந்தாலும் மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்துக்கு, முன்னாள் முதல்வர்ஸ்டாலின் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். அணை திட்டத்திற்காக ரூ.1000 கோடி கர்நாடக அரசு ஒதுக்கியதைக் கண்டித்து, இதே அவையில் தீர்மானம் நிறைவேற்றியது திமுக அரசு.

2021ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த அடுத்த மாதமே, மேகேதாட்டு அணை கட்ட அனுமதிக்கக் கூடாது என பிரதமருக்கு முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். பிறகு அதே கருத்தை வலியுறுத்தி, அதற்கு அடுத்த மாதமே ஜல்சக்தி துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதினார்.

அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களைக் கூட்டி, மேகேதாட்டு அணையை கட்ட அனுமதிக்கக்கூடாது எனதீர்மானம் நிறைவே ற்றினோம். அத்தீர்மானத்தைஒன்றியஅமைச்சரிடம் நேரில் சென்றும் வலியுறுத்தியிருக்கிறோம்

2022 - 2023 நிதியாண்டில் மேகேதாட்டு அணைக்குகர்நாடக அரசு ஒதுக்கிய நிதியைக் கண்டித்து, சட்டப்பேரவையில் அரசினர் தனித்தீர்மானம் நிறைவேற்றினோம். தமிழ்நாட்டின் உரிமைகளை காக்கநாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்' என்று முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின். செயல்பட்டார்.

இப்படி, திமுக தமிழ்நாட்டின் தொடர் எதிர்ப்பை பதிவு செய்ததன் காரணமாகதான் இதுவரை மேகேதாட்டு அணை கட்டப்படவில்லை. மேகேதாட்டு அணை கட்டும் கர்நாடகாவின் முயற்சிக்கு எதிராகமுதல்வர் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை திமுக சார்பில் மனதார வரவேற்கிறோம்.

**வரி விளம்பரங்கள்**




தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தங்கம் விலை சவரனுக்கு ஒரே நாளில் ரூ.3,040 குறைவு



சென்னை: 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை ஒரே நாளில் சவரனுக்குரூ.3,040குறைந்து ரூ.1,08,560-க்குவிற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை இனிமேல் ஏறுமுகமாகத்தான் இருக்கும் என்று சோர்வடைந்திருந்த நகைப் பிரியர்களை குஷிப்படுத்தி இருக்கிறது இன்றைய விலை மாற்றம். கடந்த சில நாட்களாக சவரனுக்கு ரூ. 240 ஏறுவதும் குறைவதுமாக இருந்த தங்கம் விலையானது, ஈரான் - அமெரிக்கா போர் முடிவால் ஏற்றம் காணும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது வரை டாலர் மதிப்பு நல்ல நிலையில் இருப்பதால், முதலீட்டாளர்கள் அதிக லாபம் தருகிற மற்ற வர்த்தகங்களில் கவனம் செலுத்தி வருகின்றனர். இதனால் தங்கம் விலை தடாலடியாக குறைந்திரு க்கிறது.

இதற்கு முன்னதாக கடந்த ஜூன் 10-ஆம் தேதி சவரனுக்கு ரூ. 3,200 குறைந்த நிலையில், அடுத்தநாள் மீண்டும் ரூ. 2,400 குறைந்து நீண்ட இடைவெளிக்கு பிறகு ஒரு சவரன் விலையானது ரூ. 1.10 லட்சத்திற்கும் கீழ் சென்றது. இந்நிலையில், இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ. 3 ஆயிரத்துக்கும் மேல் குறைந்து மீண்டும் சவரன் விலை 1.10 லட்சத்திற்கும் கீழ் சென்றிருக்கிறது. பரண தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ. 30 அதிகரித்து, மாலை ரூ. 110 குறைந்து ஒரு கிராம் ரூ.13,950-க்குவிற்கப்பட்ட நிலையில், இன்று ரூ.380 குறைந்து ஒரு கிராம் ரூ. 13,570-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி, நேற்று காலை சவரனுக்குரூ.240அதிகரித்து மாலை ரூ. 880 குறைந்து ரூ. 1,11,600-க்கு விற்கப்பட்ட நிலையில், இன்று ரூ. 3,040 குறைந்து ஒரு சவரன் ஆபரணதங்கம் ரூ. 1,08,560க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை

வெள்ளி விலையானது நேற்று கிராமுக்குரூ. 5 குறைந்து ஒரு கிராம் ரூ. 270-க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், ரூ. 15 குறைந்து ஒரு கிராம் ரூ. 255-க்கு விற்கப்படுகிறது. அதன்படி,இன்று கிலோவுக்கு ரூ. 15,000 குறைந்து ஒரு கிலோ வெள்ளி ரூ. 2,55,000-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி பகுதியில் பழமை வாய்ந்த பதுவை புனிதர் அந்தோனியார் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் 78 ஆம் ஆண்டு திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக புனிதரின் திருக்கொடி மேளதாளங்கள் முழங்க சிந்தாமணி, அனுப்பானடி பகுதிகளில் வீதி உலாவாக வந்து ஆலயம் முன்பு உள்ள கொடி மரத்தில் திருச்சபையினர் முன்னிலையில் வேதங்கள் சொல்லப்பட்டு திருக்கொடி ஏற்றப்பட்டது. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர் பின்னர் சிறப்பு கூட்டு திருப்பலியும் நடைபெற்றது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக வருகிற 27ஆம் தேதி அந்தோனியார், வேளாங்கண்ணி மாதா, மிக்கல் ஆண்டவர் சப்ரத்தில் வைத்து தேர்பவனி நடைபெறும். இதில் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான கிறிஸ்தவ பெருமக்கள் பங்கேற்பார்கள் அடுத்த நாள் அன்பின் விருந்தாக சமபந்தி நிகழ்ச்சியும் நடைபெறும்.

## கூடலூர் மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இலவச மருத்துவ முகாம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது




இந்திய செஞ்சிலுவை சங்கம், கூடலூர் மின்சார வாரியம், கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆகியன இணைந்து நடத்திய முகாமுக்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் தலைமை தாங்கினார்.

உதவி செயற்பொறியாளர் தமிழரன், உதவி மின் பொறியாளர்கள் மஜீத், கார்த்திக், ஹரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மின்சார வாரிய செயற்பொறியாளர் முத்துக்குமார், நல்லோர் வட்ட மாநில தலைவர்பாலு ஆகியோர் முகாமினை துவக்கி வைத்தனர்.

செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் சிவபிரசாத், மருந்தளுநர் நவீன், நிர்வாக அலுவலர் லாய்சன்,

செவிலியர் கிரிஜா உள்ளிட்டோர் இரத்த அழுத்தம் இரத்த சர்க்கரை அளவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனை செய்தனர். கண் தொழில்நுட்புனர் பாக்கியலட்சுமி உள்ளிட்ட குழுவினர் கண் பரிசோதனை மேற்கொண்டனர். முகாமில் 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். 75 பேருக்கு கிட்ட பார்வைக்கான கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## டெலிகிராம் செயலி மீதான தடையை நீக்க முடியாது டெல்லி உயர்நீதிமன்றம் அதிரடி




புதுடெல்லி: நீட் மறு தேர்வுக்கு முன்னதாக, டெலிகிராம் செயலிக்கு மத்திய அரசு விதித்துள்ள தற்காலிக தடை செல்லும் என டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக, கடந்த மே 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. நீட் மறுதேர்வு ஜூன் 21ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. இந்த விவகாரம் மாணவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. பல மாதங்களாக இரவும், பகலுமாக படித்து தேர்வு எழுதிய மாணவர்கள், இந்த சம்பவத்தால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இது ஒருபுறம் இருக்க, கடந்த முறை நீட் தேர்வு வினாத்தாள் டெலிகிராம் செயலி மூலம் கசிந்ததாக சிபிஐ விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ) அளித்த பரிந்துரையின் பேரில், டெலிகிராம் செயலிக்கு ஜூன் 22ஆம் தேதி வரை மத்திய அரசு தற்காலிக தடையை விதித்தது.

அது மட்டுமின்றி, டெலிகிராமில் பயனர்கள் அனுப்பிய மெசேஜ்களை எடிட் செய்யும் வசதியை வரும் ஜூன் 30ஆம் தேதி வரை முடக்கவும் மத்திய அரசு அறிவுறுத்தி இருந்தது. இதனால் டெலிகிராம் செயலியை அதன் பயனர்கள் பயன்படுத்த முடியாத சூழல் எழுந்தது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் டெலிகிராம் நிறுவனம் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், "மற்ற சமூக வலைதளங்கள், செயலிகள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல், டெலிகிராம் செயலியை மட்டும் தடை செய்திருப்பது பாரபட்சமானது. இது, அரசமைப்புச் சட்டத்தின் 14வது பிரிவுக்கு (அனைவரும் சமம் என்ற உரிமை) எதிரானது. எனவே, டெலிகிராம் அரசின் மீதான தடையை நீக்க வேண்டும்" என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மனுவானது, நீதிபதி தேஜஸ் காரியா முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, "டெலிகிராம் செயலி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை பொருத்தமற்றது எனக் கூற முடியாது. மத்திய அரசு அதன் அதிகாரத்துக்கு உட்பட்டே இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. டெலிகிராம் மீது மத்திய அரசு விதித்துள்ள தற்காலிக தடையை நீக்க முடியாது" என நீதிபதி உத்தரவிட்டார்.

## அசாமில் ரூ.14.5 கோடி போதைப் பொருள் பறிமுதல்

குவாஹாட்டி:

அசாமில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.14.5 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா சமூக ஊடகத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "போதைப் பொருட்களுக்கு எதிரான எங்கள் போர் தீவிரமாக



உள்ளது. அந்த வகையில், ஸ்ரீபூமி மற்றும் நாகா ன் ஆகிய 2 மாவட்டங்களில் தொடர்சோதனை நடத்தப்பட்டது.

அந்த நடவடிக்கையின் போது, காவல் துறையினர் ரூ.14.5 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர். மேலும், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்படும்" என கூறியுள்ளார்.

## நீலகிரி மாவட்டம் சுகாதாரத்துறை சார்பில் நுகர்வோர் காலாண்டு கூட்டம்



நீலகிரி மாவட்டம் சுகாதார துறை சார்பில் நுகர்வோர் காலாண்டு கூட்டம் நடைபெற்றது. மருத்துவம் மற்றும் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நீலகிரி மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் ராஜசேகரன் தலைமைதாங்கினார். நிர்வாக அலுவலர் நித்தியானந்தம் முன்னிலை வகித்தார் அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் அமைப்புகள் சார்பில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய பொதுசெயலாளர் சிவசுப்பிரமணியம், நிர்வாகி மகேந்திர பூபதி, கோத்தகிரி புளூமவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் வாசுதேவன், செயலாளர் முகமது சலீம், pro முகமது இஸ்மாயில், உதகை நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் அமீர்கான், கோத்தகிரி நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் நாகேந்திரன், செயலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசும்போது. கூடலூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகள் உடனிருப்போர் திறந்தவெளியில் தூங்கும் அவலநிலை போக்க தனி அறை ஒதுக்கவேண்டும். கண் மருத்துவர் வாரத்தில் ஒருநாள் கண் பரிசோதனை மட்டும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளி நோயாளிகள் பார்க்க கூடுதல் மருத்துவர்கள் நியமிக்கவும், மருத்துவமனை குறித்த குறைபாடுகள் மீண்டும் சமூக ஊடகங்களில் பரவாத வகையில் சிறந்த முறையில் மருத்துவ சேவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பந்தலூர் அரசு மருத்துவமனைக்கு ஒதுக்கிய 5 கோடி நிதி ரத்து செய்யப்பட்டுள்ளது மீண்டும் அதே கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர் பந்தலூர் மருத்துவமனைகளில் x ray வசதிகள் ஏற்படுத்த வேண்டும். கோத்தகிரி அரசு மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவில் மருத்துவர்களை அதிகப்படுத்த வேண்டும், பெண்களுக்கு பெண் மருத்துவர் வெளிநோயாளி பிரிவில் தனியாக இருக்க வேண்டும், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை 2 நிமிடமாவது சோதித்து நோய்தன்மை அறிந்து மருந்து தரவேண்டும், ரத்த அழுத்தம் மற்றும் ரத்த சர்க்கரை அளவுகள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை சோதனை அளவுகளில் வித்தியாசம் உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும், முறையாக மேற்கொள்ள வேண்டும். மருந்து மாத்திரைகள் வழங்கும் கவரில் காலை, மதியம், மாலை, இரவு போன்ற குறிப்புகளுடன் வழங்கவேண்டும் மேலும் சித்தா பிரிவு செல்லும் பகுதி சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதை சரி செய்யவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நுகர்வோர் அமைப்புகளின் சார்பில் முன்வைக்கப்பட்டது இதற்கு மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் ராஜசேகரன் கூறுகையில் கூடலூர் அரசு மருத்துவமனையில் சுழற்சி முறையில் கூடுதல் மருத்துவர்கள் இருக்க அறிவுறுத்துபட்டுள்ளது. வாரம் ஒரு நாள் கண் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கபடும். பந்தலூர் அரசு மருத்துவமனைக்கு 1.5 கோடி நிதி கோரப்பட்டுள்ளது. X-ray டெக்னீசியன் அரசு மூலம் விரைவில் நியமனம் செய்யப்படும். கோத்தகிரி அரசு மருத்துவமனை மருத்துவ சேவையில் மாநிலத்தில் மூன்றாவது இடத்தில் உள்ளது, மருத்துவர்கள் 11 பேர் பணியில் உள்ளனர். வெளிநோயாளிகள் பிரிவில் கூடுதல் மருத்துவர் இருக்க நடவடிக்கை எடுக்கபடும். தூய்மை பணிக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் ஒரு நாளைக்கு எட்டு தடவை தூய்மை பணி செய்யப்படுகிறது, ரத்த சர்க்கரை அளவு, ரத்த அழுத்தம் உள்ள கருவிகள் முறையாக அரசு வழிகாட்டுதல் படி வருடத்திற்கு இரண்டு முறை சோதனை செய்யப்படுகிறது. எனவே துல்லியமான அளவுகளில் உள்ளது. மாவட்ட இணை இயக்குநர் அவர்கள் தலைமையில் மாதம் ஒருமுறை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளை கொண்டு கூட்டம் நடத்தி மருத்துவ சேவை மேம்படுத்தலாம், மருந்து மாத்திரைகள் இனி கவரில் முறையான தகவல்களுடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர்கள் சிவக்குமார் கோத்தகிரி, பந்தலூர் நாசிருதீன், குன்னூர் பிரியதர்ஷினி, மஞ்சூர் கிருஷ்ணராஜ், என் எச் எம் மருத்துவ அலுவலர் பிரசன்னா, அலுவலக சூப்பிரண்டு கிருஷ்ண மூர்த்தி, அலுவலக உதவியாளர் கனகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கோவையில் தனிஷ்க் ஜூவெல்லரி சார்பாக 3 நாள் உயர் ரக வைர நகை கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா நிகழ்ச்சி

### கோவை பந்தயசாலையில் உள்ள ஐடிசி வெல்கம் உணவகத்தில் துவங்கப்பட்டது




கோவையில், டாடா குழுமத்தின் இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் நம்பகமான நகை விற்பனை பிராண்டான தனிஷ்க், தனது பிரத்யேக இயற்கை வைர நகைகள் கண்காட்சியை நடத்துகிறது. உயர்தர இயற்கை வைர நகைகள் மற்றும் சாலிடையர் ஆபரணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படும் இந்த பிரம்மாண்ட கண்காட்சியை, தனிஷ்க் ஜூவல்லரியின் வாடிக்கையாளர்களே தொடங்கி வைத்தனர்.

இயற்கை வைர நகைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு கண்காட்சி, ஜூன் 19 முதல் 21,ம் தேதி வரை, கோவை பந்தயசாலையில் உள்ள ஐடிசி வெல்கம் உணவகத்தில், நடைபெற்றது. காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சி, நேர்த்தியான கைவினைத் திறன், காலத்தால் அழியாத வடிவமைப்புகள் மற்றும் உயர் மதிப்புடைய இயற்கை வைரங்களின் உலகிற்குள் அழைத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், தென்னிந்திய திருமணங்கள் மற்றும் விழாக்களை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள சவுத் இந்தியன் கலெக்ஷன் பாரம்பரிய அழகையும், காலத்தால் அழியாத மதிப்பையும் ஒருங்கிணைக்கிறது. பாரம்பரியத்தை விரும்பும் மணமகள்கள் மற்றும் குடும்பங்களுக்கான சிறந்த தேர்வாக இந்த தொகுப்பு அமைகிறது. கண்காட்சியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்காக பல்வேறு சிறப்பு சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. வைர மதிப்பில் 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுவதுடன், உங்கள் பழைய தங்கத்தை எந்த நகைக்கடையில் வாங்கப்பட்டிருந்தாலும் 9 காரட் மற்றும் அதற்கு மேற்பட்ட பழைய தங்க நகைகளுக்கு 0 சதவீத கழிவு சலுகையுடன் மாற்றிக் கொள்ளும் வசதியும் வழங்கப்படுகிறது. இக்கண்காட்சியினை தனிக்ஷ் பிரைவேட் லிமிடெட்டின் நகைப் பிரிவு பிராந்திய கிளஸ்டர் மேலாளர் சந்தோஷ், தனிஷ்க் கோவை ஏரியா பிஸ்னஸ் மேலாளர்கள் சிவரஞ்சனி மற்றும் நவீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தில் உள்ள பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு மனித உரிமை அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. எங்கெல்லாம் ஒவ்வொரு மனிதனின் உரிமை பறிக்கப்படுகிறதோ அதற்கு குரல் கொடுப்பது. தவறான வழியில்சென்றுதவறானதகவல்களைமற்றவர்களுக்குமாற்றுவதுபோன்றதேவையற்றசெயல்களில்ஈடுபடுபவர்களுக்கு மனித உரிமை என்றால் என்னவென்று முன் உதாரணமாக எடுத்துக்காட்டும் வகையில் செயல்படும் மனித உரிமை கழகம் தமிழகம் முழுவதும் நிர்வாகிகள் ஏழை எளிய பலருக்கும் பாதிக்கப்பட்டால் நீதிமன்றத்தில் இலவசமாக மனித நேயத்தோடு வாதாடுவது சில உதவிகளை செய்வது என்று மனித நேயத்தோடு செயல்படும் மனித உரிமைக் கழக தலைவர் வக்கீல் செல்வம் கிறிஸ்டோபர் பிறந்தநாளை முன்னிட்டு அலுவலகத்தில் கேக் வெட்டி மனித உரிமைக்கழக நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் இணைந்து கொண்டாடி உணவுகள் வழங்கினார்கள்.

### மதுரை திருநகர் பகுதியில் உள்ள

## தேவர் முக்குலத்தோர் பள்ளியில் மாணவர் மாதிரி பாராளுமன்ற தேர்தல்



மதுரை திருப்பரங்குன்றம் அடுத்த திருநகர் பகுதியில் அரசு உதவி பெறும் முத்து தேவர் முக்குலத்தோர் பள்ளி 1956 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை மொத்தம் 1300க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் திருப்பரங்குன்றம், திருமங்கலம் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வந்து பயின்று வருகின்றனர். இந்த நிலையில் கடந்த நான்கு வருடங்களாக மாணவச் செல்வங்களின் தலைமை பண்பை வளர்ப்பதற்கும், மாணவப் பருவத்திலிருந்தே அவர்களுக்கு மக்களாட்சி தத்துவத்தின் மகத்துவத்தை உணர்த்துவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறக்கூடிய மாணவர் மாதிரி பாராளுமன்ற தேர்தல் ஐந்தாவது ஆண்டாக இன்று முத்து தேவர் முக்குலத்தோர் பள்ளியில் நடைபெற்றது. இதில் தங்களுக்கென சின்னங்கள் ஒதுக்கி 9 மாணவர்கள் பிரதமர் வேட்பாளராகவும் 12 மாணவர்கள் துணை பிரதமருக்கும் போட்டியிடுகின்றனர். இதில் பிரதமராகவும் துணை பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர் தங்களுக்கென கல்வி இலாகா, பள்ளி சுகாதாரம், மாணவர் நலன், விழா ஒருங்கிணைப்பு போன்ற ஒன்பது துறை இலக்காக்கள் ஒதுக்கப்பட்டு அமைச்சர்கள் நியமித்து மாணவர்களின் கோரிக்கையைஆசிரியர்களுக்கு எடுத்து சென்று நிறைவேற்றித் தருகிறார்கள்.

முன்னதாக கடந்த மூன்று நாட்களாக தேர்தலில் போட்டியிடும் மாணவர்கள் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பறையாக சென்று தங்கள் தேர்தல் வாக்குறுதிகளைசொல்லிமாணாக்கர்களிடம் பிரச்சாரம் மேற்கொண்டனர். தொடர்ந்து இன்று பள்ளி வளாகத்திற்குள் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு காலை 10 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி 1மணி வரை நடைபெற்றது. பள்ளி ஆசிரியர்கள் என். சி.சி மாணவர்கள் உண்மையான தேர்தல் நடைபெறும் இடம் பாதுகாப்பு போன்றவற்றைஜோடித்தனர்,மாணவர்கள் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் வாக்குகளை செலுத்தினார்.

### பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தியின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

## கோவை பந்தயசாலையில் உள்ள சாரதாம்பாள் திருக்கோவிலில் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது



இந்திய நாட்டின் பாராளுமன்ற எதிர்கட்சி தலைவரும் காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான தலைவர் ராகுல் காந்தியின் பிறந்தநாள் விழா இன்று அவரது கட்சி நிர்வாகிகளால் நாடு முழுவதும்கொண்டாட பட்டு வருகின்றது,

இதன் ஒரு பகுதியாக கோவை பந்தயசாலையில் உள்ள சாரதாம்பாள் திருக்கோவிலில் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அம்மனுக்கு சிறப்பு யாக வேள்விகள், யாகபூஜைகள் நடைபெற்றது.ராகுல் காந்தியின் பெருவாழ்வுக்காக காங்கிரஸ் கட்சியினரால் சிறப்பு வழிபாடும் நடத்த பட்டது.

நிர்வாகிகள் மத்தியில், ராகுல் காந்தி என்ற பெயர் வெறும் அரசியல் அடையாளம் அல்ல,அது சகிப்புத்தன்மை, விடாமுயற்சி மற்றும் துணிச்சலின் அடையாளம் எனவும், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நடந்து, மக்களின் கஷ்டங்களை நேரில் கேட்டு, அன்பை மட்டுமே விதைத்தவர். 'நான் பயப்பட மாட்டேன்' என்று ஒற்றை ஆளாக நின்று நீதிக்காகக் குரல் கொடுக்கும் நமது தலைவரின் பிறந்த நாளில் அவர் நூறாண்டு காலம் நலமுடன் வாழ நாம் அனைவரும் வாழ்த்தும் என்று தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு கோவை மாவட்ட காங்கிரஸ் பிரிவு ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் மாவட்ட தலைவர் எம். எஸ். பார்த்திபன் தலைமை தாங்கினார். முன்னாள் மூத்த காங்கிரஸ் தலைவர் ஏ.கனேசன்,மண்டல தலைவர் மோகன்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர் மேலும்

இந்த நிகழ்ச்சியில் முன்னால் சட்ட மன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் துணைத்தலை வருமான எம்.என்.கந்தசாமி, கோவை மாவட்ட மாநகர காங்கிரஸ் கட்சி தலைவர் விஜயகுமார், ஐஎன்டியுசி மாநில செயலாளர் கோவை செல்வம், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் பச்சமுத்து, பி. கே. ஆர். சௌந்தரகுமார், சச்சின் சிவக்குமார், பாசமலர் சண்முகம்,ஜெரிலூயிஸ், பறக்கும் படை ராஜ்குமார், எம். எஸ் பிஆர் ஆனந்த், காலனி பிரபு, மணிகண்டன், அமுல் ராஜ், வின்சென்ட், பாலு, நித்தி, பைமெட்டல் சுரேஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சாரதாம்பாள் திருக்கோவிலுக்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் இனிப்புகள் வழங்கி ராகுல் காந்தி பிறந்தநாளை உற்ச்சாகமாக கொண்டாடினர் என்பது குறிப்பிடத்த க்கது.



அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி பிறந்த தினத்தை ஒட்டி ஈரோடு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஸ்ரீ வலம்புரி கற்பக விநாயகர் திருக்கோவிலில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாவட்டத் தலைவர் ஈ.ஆர்.எஸ்.பிரகாஷ் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாநிலச் செயலாளர் சி.எம். ராஜேந்திரன், இணைச்செயலாளர் வினோத் மாரியப்பா முன்னிலையில் ராகுல் காந்தி பெயரில் சிறப்பு அபிஷேகம் அர்ச்சனை செய்யப்பட்டு பக்தர்களுக்கு லட்டு வழங்கபட்டது. இந்த நிகழ்வில் வழக்கறிஞர் சாமிநாதன், சனோப்பர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



கோவையில், ஆட்டிசம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பயிற்சி பெற்று வரும் நிலையில்

## வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர தமிழக அரசு முன்வர வேண்டும்

### நித்தில்யம் அறக்கட்டளையினர் கோரிக்கை

கோவை மாவட்டம் அன்னூரில் உள்ள நித்தில்யம் சிறப்புப் பள்ளியில் படிக்கும் ஆட்டிசம் பாதித்த மாணவர்களின் திருக்குறள் கூறும் "குறளோசை" நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நடிகர் சிவக்குமார் குழந்தைகள் மத்தியில் திருக்குறளை கொண்டு சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார்.

இதனைத் தொடர்ந்து சிவக்குமார் கேட்ட கணித விடுகதை ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் ஒருவர் சரியான விடை அளித்தார்.

இதனைத் தொடர்ந்து அவருக்கு 1000 ரூபாய் சன்மானமாக வழங்கிய சிவக்குமார், இதுவரை இந்த விடுகதைக்கு மூன்று பேர் மட்டுமே சரியான விடை அளித்து தன்னிடம் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

நிகழ்ச்சி குறித்து பேசியநித்தில்யம்அறக்கட்டளை தலைவர் காயத்ரி சம்பத்,ஆட்டிசம் பாதித்த குழந்தைகள் பள்ளிகளில் பயிற்சி முடித்து வெளியே வரும்போது, அவர்களுக்கு தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பை வழங்க முன்வர வேண்டும்.

ஆட்டிசம் பாதித்த தனது குழந்தை வளர்ந்த பின் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்யும் என்பது இன்றைய கால பெற்றோர்களின் கவலையாக உள்ளது. எனவே தமிழக அரசு இந்த குழந்தைகளின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும். இது வாழ்க்கை மீது அவர்களுக்கான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் நித்தில்யம் அறக்கட்டளை நிர்வாகிகள் சம்பத்குமார், அருள் செல்வம்,ஈஸ்வர மூர்த்தி,தீபா சுப்ரமணியம், ராஜேந்திரன்,யாமினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ராகுல் காந்தி பிறந்தநாள்: ஈரோடு பெரியமாரியம்மன் கோவிலில் காங்கிரஸ் சார்பாக சிறப்பு பூஜை மற்றும் இனிப்பு விநியோகம்



இந்தியாவின் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பாக ஈரோடு பெரிய மாரியம்மன் கோவிலில் சிறப்பு பூஜை மற்றும் அபிஷேகம் நடைபெற்றது. இந்த சிறப்பு நிகழ்ச்சிக்கு இரண்டாம் மண்டல தலைவர் விஜயபாஸ்கர் தலைமை தாங்கினார். ஈரோடு மாநகர் மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜப்பா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எம்.பழனிச்சாமி,முன்னாள் மாவட்ட தலைவரும் மாமன்ற உறுப்பினருமான ஈ.பி. ரவி, முன்னாள் மாவட்ட தலைவர்இ.ஆர்.ராஜேந்திரன், மண்டல தலைவர்கள் கோபி, சாம்ராட், அசோக் ஆகியோர் பங்கேற்றனர். தொழிலாளர் பிரிவு மாநில துணைத்தலைவர் குலம் ராஜேந்திரன், வார்டு தலைவர் மணிகண்டன் மகளிர் அணியைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். பூஜைக்குப் பின், பொதுமக்களுக்கும் பக்தர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு ராகுல் காந்தியின் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### ராகுல்காந்தி பிறந்தநாளை முன்னிட்டு

## காங்கிரஸ் கட்சி சார்பில் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கினர்



தூத்துக்குடியில் காங்கிரஸ் கமிட்டி சார்பில் ராகுல் காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு, முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்குக் காலை உணவு வழங்கப்பட்டது.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான ராகுல் காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பெருமாள்சாமி தலைமையில் சிதம்பர நகரில் அமைந்துள்ள 'பாசக்கரங்கள்' முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்குக் காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அகில இந்திய காங்கிரஸ் ஒர்க்கர்ஸ் கமிட்டி தலைவர் ஜெயக்கொடி இதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இந்நிகழ்வில் வடக்கு மாவட்டத் துணைத் தலைவர் பெத்துராஜ், மாநகரச் செயலாளர் இக்னேசியஸ், மீனவரணி மிக்கேல் குரூஸ், பழங்குடியினர் பிரிவுத் தலைவர் முனியசாமி, மகிளா காங்கிரஸைச் சேர்ந்த தனலட்சுமி, இசக்கியம்மாள், ஜெஸ்ஸி மற்றும் கட்சி நிர்வாகிகள் செல்வமுருகன், முருகேசன், எஸ்.எம்.டி.சுந்தர்ராஜ், சாந்தகுமார், பாலகிருஷ்ணன், காமராஜ், மாரியப்பன், முத்துராஜ், தெர்மல் முத்து,ஷேக்ஸ்பியர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நீட் தேர்வுக்கான வழிகாட்டு நெறிமுறை வகுக்க கோரிய வழக்கு தள்ளுபடி



சென்னை:நீட் தேர்வை நேர்மையாக, வெளிப் படைத் தன்மையுடன் நடத்தும்வகையில்நிலையான வழி காட்டி நெறி முறைகளை வகுக்க மத்திய அரசுக்கு உத்தர விடக்கோரிகிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரைச் சேர்ந்த வெங்கடேஸ் வரன்என்பவர்சென்னை உயர் நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்தார்.

தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர் மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு இந்த வழக்கை விசாரித்தது.

"நீட் தேர்வு தொடர்பாக வழி காட்டு நெறிமுறைகளை வகுக்குமாறு உச்ச நீதி மன்றம் கடந்த 2024-ம் ஆண்டே மத்திய அரசுக்கு உத் தரவிட்டுள்ளது.

தற்போது வினாத்தாள் கசிந்தது தொடர்பாகவும் உச்ச நீதிமன் றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதை விசாரித்த உச்ச நீதிமன்றம்,இதுகுறித்து பதில் அளிக்க மத்திய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் உத்தரவிட்டுவிசாரணையை ஜூலைக்கு தள்ளிவைத்துள்ளது என்று கூறி வழக்கைதள்ளுபடிசெய்து உத்தரவிட்டனர்.



ஈரோடு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக (PRO) சு.மகேஸ்வரன் நேற்று (19.06.2026) அதிகாரபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறை ஊழியர்கள், மாவட்டத்தின் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட பத்திரிகை நிருபர்கள் நேரில் சந்தித்து தங்களது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.



பள்ளி வேனில் சிக்கி 8 வயது சிறுமி உயிரிழந்துள்ளார் ஏற்காட்டில் தினசரி பள்ளி மாணவர்களை ஏற்றி சென்ற தனியார் டிராவல்ஸ் வேனில் சிக்கி 8 வயது சிறுமி பரிதாபமாக உயிரிழந்தார் இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடம் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



ஈரோடு மாநகர் செங்கோடம்பள்ளம் பகுதியில் செயல்படும் தனியார் பள்ளியின் விறகு கிடங்கில், 8 அடி மற்றும் 9 அடி நீளமுள்ள இரண்டு சாரை பாம்புகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. இதைப் பார்த்த பள்ளி ஊழியர்கள் அதிர்ச்சியடைந்து, பாம்பு பிடி வீரர் யுவராஜாவுக்குத் தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த அவர், இரண்டு பாம்புகளையும் பத்திரமாகப் பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தார்.

## 32 out of 2,766 buses on roads:

# BEST strike in Mumbai leaves commuters stranded



*Commuters in Mumbai had to face a crisis during the peak morning hours on Friday as only a handful of the buses by the Brihanmumbai Electricity Supply and Transport (BEST) were seen on roads.*

*The buses are the life-blood of the busy city and one of the most frequently used modes of transport. They generally operate at a frequency of about 10-15 minutes, and even lower in some cases, but the employees' indefinite strike has forced buses out of the roads, leaving many commuters stranded.*

*According to news agency PTI, only 32 of the BEST's 2,766 buses were on Mumbai's roads during this morning's peak hours. Most of BEST buses are hired from private operators on a wet-lease basis.*

*While 38 buses could leave various depots across Mumbai, six of them were forced to return after incidents of stone-pelting and obstruction by striking employees. With buses missing from roads, commuters had to opt for locals trains, metro services, autorickshaws, taxis, and app-based cabs.*

*The BEST Sanyukt Kamgar Kruti Samiti, a joint action committee comprising 12 unions has called the strike, which began after Thursday midnight.*

*Here's a list of demands by the employees (as per a PTI report). Merger of BEST's budget with that of the BMC (Brihanmumbai Municipal Corporation). A one-time settlement of legal dues of retired employees.*

*Implementation of the Seventh Pay Commission recommendations for the 2016-2026 period.*

*Abolition of contractual arrangements in the transport and electricity departments.*

*Absorption of wet-lease bus workers into BEST.*

*Commuters stranded, ex-MP writes to Fadnavis*

*BEST is Mumbai's second-largest public transport provider after the suburban railway network. The strike went underway despite a court's ad-interim order against it, and the Maharashtra government's invocation of the Maharashtra Essential Services Maintenance Act (MESMA) to prohibit disruption of essential services.*

சர்வதேச யோகா தினத்தையொட்டி உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தலைமையில்

# 3300 மாணவர்கள் 200 பணியாளர்கள் பங்கேற்ற பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சி

*சர்வதேச யோகா தினத்தை ஒட்டி உயர் நீதிமன்ற நீதிபதி ஜி ஆர் சுவாமிநாதன் தலைமையில் 3300 மாணவர்கள் 200 பணியாளர்கள் பங்கேற்ற பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சி-தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய கிரிக்கெட் மைதானத்தில் வேலம்மாள் கல்வி குழுமம் சார்பில் நிகழ்ச்சி ஏற்பாடு 12-வது சர்வதேச யோகா தினத்தை ஒட்டி*

*மதுரை வேலம்மாள் பள்ளிகளில் சர்வதேச யோகா கொண்டாட்டமாக மதுரை வேலம்மாள் பள்ளிகள் குழுமம் சார்பில் 12-வது சர்வதேச யோகா தினத்தை ஒட்டி*

*வேலம்மாள் குளோபல் பள்ளியின் கிரிக்கெட் மைதானத்தில் ஆரோக்கியமான முதுமைக்கான யோகா என்ற தலைப்பில் வேலம்மாள் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3,300 மாணவர்கள் மற்றும் 200 பணியாளர்கள் கொண்ட பிரம்மாண்ட யோகா பயிற்சி-உயர்நீதிமன்றம் நீதியரசர் ஜி ஆர் சுவாமிநாதன் பங்கேற்று யோகா பயிற்சியை வழி நடத்துகிறார்.*




*வேலம்மாள் குளோபல் பள்ளியின் கிரிக்கெட் மைதானத்தில் பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" (Yoga for Healthy Ageing) என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெறும் இந்த மாபெரும் யோகா நிகழ்வில், மதுரை மாவட்டத்தில் உள்ள ஐந்து வேலம்மாள் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3,300 மாணவர்கள் மற்றும் 200 பணியாளர்கள் பங்கேற்று யோகா மேற்கொண்டனர்.*



*இந்நிகழ்ச்சியில் மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு யோகா பயிற்சியை வழி நடத்தினார்.*

*தொடர்ந்து நீதிபதி மாணவர்கள் மத்தியில் பேசும் போது: இந்த நன்னாளில் நீங்கள் அனைவரும் யோகா செய்திருக்கிறீர்கள். இது உங்களுடைய தினசரி வழக்கத்தின் ஒரு பகுதியாக மாற வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.*

*உங்களுக்கு கேள்வி இருக்கலாம். 'நான் ஏன் யோகா செய்ய வேண்டும்?' நான் பிரக்ஞானந்தாவிடமிருந்து (Praggnanandhaa) தொடங்குகிறேன்.அவர் வேலம்மாள் கல்வி நிறுவனத்தின் ஒரு மாணவர் .பிரக்ஞானந்தா ஒரு உண்மையான வீரன்! அவர் கார்ல்சனை மூன்று முறை தோற்கடித்துள்ளார். இது ஒரு அற்புதமான சாதனை! அவரை இது போன்ற ஒரு சாம்பியனாக மாற்றியது எது? ஏனெனில், அவரிடம் ஒருமுகப்படுத்துதல் மற்றும் கவனக்குவிப்பு இருந்தது. எனவே, யோகாவின் மூலம் மட்டுமே நம்மால் ஒருமுகப்படுத்துதல் மற்றும் கவனக்குவிப்பு போன்ற குணங்களைப்பெறமுடியும். முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி தனது 70 வயதில் யோகா செய்யத் தொடங்கினார். கிருஷ்ணமாச்சார்யா யோகமந்திரத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தினசரி வந்து அவருக்கு வழிகாட்டுவார். நம்முடைய பிரதமர் நரேந்திர மோடி ஜி தினசரி யோகா செய்கிறார். இந்த 75 வயதிலும் கூட, அவரால் உங்களையும் என்னையும் விட கடினமாக உழைக்க முடிகிறது. அவர் உங்களையும் என்னையும் விட தகுதியுடன் இருக்கிறார். மாபெரும் தத்துவஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தினசரி யோகா பயிற்சி செய்து வந்தவர். எனவே, நாம் அனைவரும் இந்த யோகாவை நம்முடைய தினசரி வழக்கத்தின் ஒரு பகுதியாக மாற்றிக்கொண்டால், நாமும் உடலளவில் தகுதியுடனும் மனதளவில் விழிப்புடனும் உணர்ச்சிப்பூர்வமாக சமநிலையுடனும் இருப்போம். நாம் ஒருமுகப்படுத்துதல், கவனக்குவிப்பு மற்றும் ஒழுக்கம் ஆகிய குணங்களை வளர்த்துக் கொள்வோம். அனைத்து கெட்ட பழக்கங்களும் நம் வாழ்க்கையிலிருந்து மறைந்துவிடும். நமக்கு அந்த ஒருமுகப்படுத்துதலும் கவனக்குவிப்பும் கிடைத்துவிட்டால், நாம் காணும் ஒவ்வொரு கனவையும் நம்மால் நனவாக்க முடியும் என்றார்.*

ஈரோடு மாவட்டத்தில் யோகா தின விழா:


# யோகா என்பது உடலை மட்டுமல்லாமல் மனதையும் வளப்படுத்தும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேச்சு

*ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூடுதல் கட்டிட அலுவலக வளாக தளத்தில் நேற்று (19.06.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதித்துறை, நந்தா இயற்கை (ம) யோகா மருத்துவக்கல்லூரி இணைந்து நடத்திய 12 வது சர்வதேச யோகா தின விழா நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேசும் போது தெரிவித்ததாவது,*

*இன்றைய சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளில் வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் தவறான உணவுப் பழக்க வழக்கங்களால் பலரும் நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைத் தவிர்க்கவும், உடல் மற்றும் மனநலத்தைப் பேணிக்காக்கவும் யோகா ஒரு சிறந்த வழிமுறையாக விளங்குகிறது. மேலும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தோன்றிய யோகா கலை, நேற்று உலக நாடுகள் முழுவதும் பரவி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வழங்கி வருகிறது. யோகா என்பது உடலை மட்டு-*




*மல்லாமல் மனதையும் வளப்படுத்தும் முழுமையான பயிற்சியாகும். இதன் முக்கியத்துவத்தை பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.*

*இன்றைய வேகமான வாழ்க்கைச் சூழலில் அனைத்து வயதினரும் தினசரி யோகா பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். யோகாவை அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக கடைப்பிடிப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம், மன அமைதி, கவனக்குவிப்பு மற்றும் செயல்திறன் மேம்படும். ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் யோகா பயிற்சியை மேற்கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை பின்பற்ற வேண்டும் என தெரிவித்தார். தொடர்ந்து, உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்துவதில் யோகாவின் முக்கியத்துவம், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், நந்தா இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து பல்வேறு யோகாசனங்கள், மூச்சுப்பயிற்சிகள், ஆசனங்கள் மற்றும் தியானப்பயிற்சிகள் செய்முறை விளக்கத்துடன் நடத்தப்பட்டது.*


*தொடர்ந்து, 12-வது சர்வதேச யோகா தின விழாவில் யோகா பயிற்சியில் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், யோகா பயிற்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மாவட்ட ஆட்சியரக அரசு அலுவலர்கள், நந்தா இயற்கை(ம)யோகா மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சியாளர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர், (நலப்பணிகள்) மரு.இரா.ஜெயந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் .அருணா, மா வட்ட குழந்தை வளர்ச்சி அலுவலர் பூங்கோதை, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.பா.யசோதை, தலைவர்- (நந்தா கல்வி நிறுவனங்கள்) வி.சண்முகன், கவுந்தபாடி, அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அலுவலர் (சித்தா), மரு. து.ச.வெங்கடாசலம், முதல்வர் நந்தா இயற்கை மற்றும் யோகா மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை மரு.ரெ. ரீவ்ஸ் ஜஸ்டிலிணட் தாஸ், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக கலப்பு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது

*கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் இன்று கலப்பு திருமணம் நடைபெற்றது. கோவை மாவட்டம் குனியமுத்தூர் பகுதியை சேர்ந்தவர் ஹக்கிம்-45*

*வயதான இவர், கோவை மாவட்டம் போத்தனூர் பகுதியை சேர்ந்த ஷபினா பேகம் என்ற 37 வயது பெண்ணை, திருமணம் செய்துகொண்டார். இருவரும் இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்த நிலையில், இருவருக்கும் ஏற்கனவே திருமணமாகி முறைப்படி இருவரும் விவாகரத்து பெற்றுள்ளனர்.*

*தொடர்த்து இருவரும் திருமணம் செய்து கொள்ள பெரியோர்கள் பேசி முடிவு செய்து, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரது வீட்டு உறுப்பினர்கள் பலர் முன்னிலையில், இஸ்லாமிய முறைப்படி, திருமண பதிவு சான்றிதழில் இருவரும் கையேழுத்து இட்டு கணவன், மனைவியாக திருமணம் செய்து கொண்டனர். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த திருமண*



*நிகழ்ச்சியில், வழக்கறிஞர் குமாஸ்தாகள் லட்சுமி, திவ்யா, செல்வராஜ், சரவணம்பட்டி கதிர் பாலாஜி, கணுவாய் டெய்லர் ஆனந்தி, கவுண்டம்பாளையம் லட்சுமி, தங்கவேல், நடிகர் ஜான், ஷாஜிதின், முகமது அலி, ரத்தினம், சங்கத்தமிழ் செல்வன், விஜயகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.